## R 5493 (page 200)

# முன்மாதிரிகையின் முக்கியத்துவம்

## THE IMPORTANCE OF EXAMPLE

"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடிக்கு நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும் விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு" - 1தீமோத்தேயு4:12.

தீமோத்தேயு வயதில் இளையவராயிருந்தாலும், சபையில் ஒரு மூப்பராக இருந்தார் என்பதை நாம் நினைவில் கொள்ளவேண்டும். ஆகவே அவர் விசுவாசிகளுக்கும், சபை முழுமைக்கும் மாதிரிகையாக இருக்கவேண்டும் என்று, பரிசுத்த பவுல் அவரது சிந்தையில் பதிய வைப்பது பொருத்தமாயிருந்தது. இப்படிப்பட்ட அறிவுரை நிருபத்தின் மற்ற இடங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால் அப்போஸ்தலர், நம் திறவுகோல் வசனத்தில் விசுவாசிகளுக்கு முன்மாதிரியாயிரு என்று கூறாமல், விசுவாசம் உடையவர்கள் எப்படி வாழவேண்டும் என்பதற்கு முன்மாதிரியாயிரு என்றார். இக்கருத்து எவ்வளவு வித்தியாசப்படுகிறது!

விசுவாசிகளின் முன்மாதிரியாயிருத்தல் என்பது, விசுவாசிகள் எதற்காக நிற்கிறார்கள், அவர்கள் எதை விசுவாசிக்கிறார்கள், அவர்கள் எதை போதிக்கிறார்கள், எப்படி அவர்கள் ஜீவிக்கிறார்கள் என்று சுவிசேஷத்தில் உள்ள தன் உடன்வேலையாட்களுக்கு காண்பிப்பது மட்டுமல்லாமல், குறிப்பாக உலக ஜனங்களுக்கு முன்பாக ஒருவர் வெளிப்படுத்துவதை அர்த்தப்படுத்துகிறது. நாம் சத்திய செய்தியைப் பிரகடனப்படுத்தும்போது, நம் வார்த்தையிலும், அதாவது, அப்போஸ்தலர் கட்டளையிடுகிறபடி, நம் மொழியின் குணத்திலும் அப்படிப்பட்ட மாதிரிகையை ஏற்படுத்துவதை நாம் காணவேண்டும். நாம் மென்மை நாவுடையோராகவும் உணர்ச்சி ஆர்வமிக்கவராயும் மட்டும் இராமலும், இரக்கமுள்ள வார்த்தைகளை பேசுவோராய் மட்டும் நில்லாமலும், கருணையுள்ளோராயும், வெளிப்படுத்தப்படும் ஆர்வம் உண்மையானதாயும், இருதயத்திலிருந்து வருவதாயும் இருக்கவேண்டும். இவ்வாறு கர்த்தருடைய பிள்ளைகள் அனைவரும் மாதிரிகைகளாக இருந்து, நம் ஆண்டவரின் துதியை வெளிப்படுத்த பாடுபடுவார்கள்.

"நீ நடக்கையிலும் முன்மாதிரியாயிரு" என்று பரிசுத்த பவுல் மேலும் வலியுறுத்துகிறார். நமது நடக்கை என்ற வார்த்தை, பேச்சை மட்டும் குறிப்பிடுவதில்லை, இந்த வார்த்தையின் உண்மையான அர்த்தம் நடத்தையாக இருக்கிறது. நம் நடத்தை, நம் பண்பையும், நாம் செயல்படும் விதத்தையும், நாம் நடக்கும் வழியையும், நம் பொதுவான ஒழுக்கத்தையும் சார்ந்திருக்கிறது. வெறுமனே வார்த்தைகளை மட்டும் சார்ந்ததல்ல. நம் பெருந்தன்மையான நடத்தையால் நாம் முன்மாதிரியாயிருக்கவேண்டும். நாம் கதவை மூடுபவர்களாகவோ, மூர்க்கத்தனமாகவோ, அருவருப்பானவர்களாகவோ, பிறரைக் குறித்த சிந்தையற்றவர்களாகவோ இருக்கக்கூடாது. நாம் முரட்டுத்தனமாக அல்ல, ஒவ்வொரு வழியிலும் தயாளமும் கருணையும் அக்கறையுமுள்ளோராக நடந்துகொள்ளவேண்டும்.

## உங்கள் வெளிச்சம் பிரகாசிக்கட்டும்

கிறிஸ்தவர்கள் எப்படி இருக்கவேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக, புதிய சுபாவத்திற்கென ஜெநிப்பிக்கப்பட்டவர்கள், தங்களை எல்லோருக்கும் வெளிப்படுத்த பிரயாசப்படவேண்டும். நாம் ஈடுபட்டிருக்கிற வேலையின் தன்மையானது நேர்மையாக இருக்கவேண்டும். அது தற்காலத்துக்குரியதாக இருந்தாலும், மனிதரைப் பிரியப்படுத்துபவர்கள் போலல்லாமல் கர்த்தருக்கு செய்வதுபோல, இருதயத்தில் ஒரே நோக்கமுடையவர்களாக, தேவ ஊழியக்காரர்களாக கவனமாகவும் உண்மையோடும் அது செய்யப்படவேண்டும். ஏனெனில் நாங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவுக்கே ஊழியம் செய்வோம்! கிறிஸ்தவனுடைய நடக்கையானது தியாக அன்பு என்ற பொருளில் இருக்கவேண்டும், பரிவிரக்கத்திலும், கருணையிலும், இரக்கமுள்ள வார்த்தையிலும் மற்றும் நடத்தையிலும் இருக்கவேண்டும். பொதுவான பரிவிரக்கமுள்ள ஆவி அவனுடைய வார்த்தையையும் செயல்களையும், அவனது முழு நடத்தையையும் நிரப்பவேண்டும். பரலோகத்தகப்பன் மனுக்குலத்தை நேசித்தார், அவர்கள் பாவிகளாயிருக்கும்போதே அந்த சந்ததியை நேசித்து, மனிதனது மீட்புக்காக தம் இருதயத்தின்மேலான பொக்கிஷமாயிருந்ததை கொடுத்தார். அவர் இன்னும் உலகத்தை நேசிக்கிறார், வருங்காலத்தில் உலகை ஆசீர்வதிப்போராக இருக்க, திருச்சபையை பொருந்தச் செய்துவருகிறார். ஆகவே கர்த்தருடைய ஆவியால் ஜெநிப்பிக்கப்பட்ட எவரும் தங்கள் ஜீவியத்தில் மறுரூபமாக்கும் செல்வாக்கைப் பெற்றிருக்கவேண்டும். தேவனுடைய வெளிச்சத்தால் இன்னும் ஆசீர்வதிக்கப்படாதோரிடத்திலும், வழிவிலகிச் செல்வோரிடமும்கூட அந்த செல்வாக்கு தன்னில்தானே வெளிப்படும்.

“நீ ஆவியிலும் முன்மாதிரியாயிரு” என்று நம் திறவுகோல் வசனம் கூறுவதை வாசிக்கிறோம். “ஆவியிலும்” என்ற சொற்றொடர், வேதாகமத்தின் மூலப்பிரதிகளில் இடம்பெற்றிருக்கவில்லை. ஆயினும் இக்கருத்து முறையானதாக காணப்படுகிறது. நாம் எல்லோரிடமும் கருணையின் ஆவியை, மனப்பான்மையைக் காண்பிக்கவேண்டும். கர்த்தருடைய சிந்தையாகிய ஆவியே எல்லா நேரங்களிலும் நம்மை உயிர்ப்பிக்கும் ஆவியாக இருக்கவேண்டும்.

“விசுவாசத்திலும்” முன்மாதிரியாயிருக்கும்படி நமக்கு புத்திமதி கூறப்படுகிறது. அப்போஸ்தலருடைய புத்திமதி நம் எல்லோருக்கும் பொருந்தக்கூடியது. கிறிஸ்தவனுடைய விசுவாசம் அவனுடைய நடக்கையிலும், அவனுடைய வார்த்தையிலும், அவனுடைய வாழ்க்கை நடைமுறையிலும் பிறருக்கு வெளிப்படுத்தப்படுகிறது. அவன் முழு விசுவாசத்தோடு இருப்பானானால், தன் ஜீவியத்தில் அடைகிற அனுபவங்களுக்கு எதிராகவோ, கர்த்தருடைய ஏற்பாடுகளுக்கு எதிராகவோ அவன் முறுமுறுக்கமாட்டான். சர்வ வல்லவர் தமது குழந்தைகளாக நம்மை ஏற்றுக்கொண்டிருக்கிறார். நாம் அவரிடத்தில் தொடர்ச்சியான மற்றும் உறுதியான நம்பிக்கை உடையோராயிருக்கவேண்டும். யாரெல்லாம் உண்மை விசுவாசத்தை அடைந்திருக்கிறார்களோ அவர்கள் இந்த நம்பிக்கையை பெற்றிருக்கிறார்கள். தேவனிடத்தில் அற்ப விசுவாசமுடையோராக நம்மில் யாராவது காணப்படுவோமானால், பிறரிடத்தில் நம்மால் விசுவாசத்தை வெளிப்படுத்தமுடியாது, அல்லது அவர்களிடத்தில் விசுவாசத்தின் உத்வேகத்தை ஏற்படுத்தமுடியாது.

நாம் “தூய்மையிலும்” முன்மாதிரியாயிருக்கவேண்டும். தேவனோடும் அவருடைய வார்த்தையோடும் தொடர்புடைய எல்லாவற்றோடும், ஒரு உயர்ந்த தரத்தில் தூய்மை

இணைந்து செல்கிறது. இது வேறெங்கும் காணப்படாதது. புறஜாதியாரின் தேசங்களில் ஜனங்கள் ஓரளவு தூய்மையான வாழ்க்கை வாழ்ந்தாலும், கிறிஸ்தவர்களிடையே உள்ள உயரிய தரம் வேறு எங்குமில்லை. அசுத்தமான அனைத்தும் தேவனுக்கு விரோதமானது. கிறிஸ்தவ குணாதிசயத்தில் பரிசுத்தம் அல்லது தூய்மை ஒரு ஆக்கக்கூறாக உள்ளது. நாம் முதலாவது சுத்தமுள்ளோராயும், பின்பு சமாதானமும், சாந்தமும் உள்ளோராயும் இருக்கவேண்டுமென்று, வேறு ஒரு தருணத்தில் அப்போஸ்தலனால் கூறப்பட்டது.

## வாசிக்கப்பட்டும் அறியப்பட்டுமிருக்கிற ஜீவனுள்ள நிருபங்கள்

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும், இந்த வழிகள் அனைத்திலும், அவர்கள் எங்கு சென்றாலும் ஜீவனுள்ள பாடங்களாக, ஜீவனுள்ள நிருபங்களாக இருக்கவேண்டும். அவர்கள் உலகிற்கு முன்மாதிரிகைகளாக இருக்கவேண்டும். நாம் போதிப்பதை உலகம் நம்புகிறதோ இல்லையோ, இந்த இயல்புகளை நாம் வெளிப்படுத்தவேண்டும், அவர்களால் நம்ப முடியாவிட்டாலும் அங்கீகரிப்பார்கள், மதிப்பளிப்பார்கள். இந்த முன்மாதிரி, இப்போது இல்லாவிட்டாலும், ஏற்ற சமயத்தில் கனிதரும். தீமோத்தேயுவைப்போல ஒவ்வொரு மூப்பரும் அவருடைய நடத்தையில், வார்த்தைகளில் முன்மாதிரியில் குறிப்பாக கவனமாக இருக்கவேண்டும். சபை அப்படிப்பட்ட மூப்பரை தேர்ந்தெடுப்பதன்மூலம், இருதயத்தில் தேவனுடைய கிருபையின் கனிகளுக்கு ஒரு முன்மாதிரியாக அவர் இருப்பார் என்று அவர்கள் நம்புவதை வெளிப்படுத்துகிறது.

தீமோத்தேயுவுக்கு அப்போஸ்தலருடைய ஆலோசனை என்னவெனில், “உன் இளமையைக் குறித்து ஒருவனும் உன்னை அசட்டை பண்ணாதபடி முன்மாதிரியாயிரு” என்பதாகும். இந்த ஆலோசனை தீமோத்தேயுவுக்கு மட்டுமல்ல, சபையில் மூப்பர்களாக இருக்கிற அனைத்து இளையவர்களும் கவனிக்கவேண்டியது. அவர்கள் மந்தைக்கு தங்கள் நடக்கைகளால் மாதிரிகைகளாக விளங்கவும், மேலும் சத்திய வசனத்தை சரியாய்
**R5494 : page 201**
பகுத்துப்பார்க்கும் ஆற்றலும், பிறரிடத்தில் நடந்துகொள்ளும் விதமும், அவர்கள் கொண்டுவருகிற செய்தியை குறைப்பதற்கோ அல்லது தேவனுடைய மந்தையை வழிநடத்த தகுதியற்றவர்கள் என்றோ, முதிர்ச்சியற்றவர்கள் என அவர்களைக் குறித்து எண்ணுவதற்கோ ஒருவனுக்கும் காரணம் இருக்காது.

ஆகவே வாலிபராகவும், வயோதிகராகவும் இருக்கிற தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் பின்பற்ற தகுதியான மாதிரிகைகளாக இருப்பதற்கு, தன் அன்றாட வாழ்வில் தன் ஆண்டவரின் சாயலை பிரதிபலிப்பதில் ஊக்கமுள்ள, உண்மையுள்ள மாதிரியாக இருப்பதற்கு பெருமுயற்சி செய்வார்களாக! நம் தேவனுடைய ஊழியத்தில் தீவிர வைராக்கியத்துக்கு சிறந்த மாதிரிகையாயும் இருப்பார்களாக. நாம் திரைக்கப்பால் அடையவிருக்கும் பரிசுத்த அழகுக்கும், இறுதி மகிமையின் முழு உணர்வுக்கும் மாதிரிகையாக இந்த மாம்ச சரீரத்தில் நம்மால் இருக்கமுடியாது. இந்த தற்கால வாழ்வில் இதை நாம் எதிர்பார்க்கமுடியாது. நம் கர்த்தர் மட்டுமே அப்படிப்பட்ட மாதிரிகையாயிருக்கிறார்.

“நான் கிறிஸ்துவைப் பின்பற்றுகிறதுபோல, நீங்கள் என்னைப் பின்பற்றுகிறவர்களாயிருங்கள்”(1கொரிந் 11:1) என்று அப்போஸ்தலர் பவுல் வலியுறுத்துகிறார். கிறிஸ்துவின் பரிபூரண சாயலை அடைவதற்கான தீவிரமுயற்சியின்

உன்னதமான மாதிரிகையாக பரிசுத்த பவுல் இருந்தார். பவுல் அப்போஸ்தலனின் அன்பும், அவரது வைராக்கியமும், தன் குருவை பிரதியெடுக்க தீவிர ஊக்கத்தோடு போராடியதும், கிறிஸ்துவின் சித்தத்தை நிறைவேற்றியதும் நம் அனைவருக்குமான அகத்தூண்டுதலாய் இருக்கவேண்டும். கர்த்தருடைய பிள்ளைகள் ஒவ்வொருவரும் தனித்தனியாக, தன் தனிப்பட்ட பொறுப்புணர்வை அடைவோமாக! “மலைமேல் கட்டப்பட்ட பட்டணமாக” நாம் இருப்போமாக! நான் “விசுவாசிகளின் முன்மாதிரிகையாய் இருக்கிறேனா?”என்ற கேள்வியை ஒவ்வொருவரும் நமக்கு நாமே கேட்போமாக!

------------------